27595

மங்கையர்க்கு உகந்த

# மனோன்மணி ஒப்பாரி



19291

A. பாபு அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

உ

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பமானகீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்துதாஸ் அவர்கள்

இயற்றிய

மங்கையர்க்குகந்த

# மனோன்மணி ஒப்பாரி

---

வெண்பா

அம்பிகையாள் மனமகிழும்
ஆதி புதல்வா இத்ததி
மனோன்மணி ஒப்பாரி இயம்புதற்கு
தும்பிமுகனே துணைபுரிவாய்
நின்பதமே நம்பினேன் எனதருள்புரிவாய்

## தகப்பனைருக்குப் புலம்பல்

தங்கநிலைக் கண்ணாடி நான் தருமராஜா பெற்றபெண்ணான்
நான் கட்டில் அரிசிகொண்டு தங்காலிபூவுகொண்டு
நான் தலையைமுழுகி தலை மயிரை சிக்குணர்த்தி
என்னைபெற்ற அப்பா நான் தவத்தால் பிறந்தமகள்
தலைக்கு நல்லஎண்ணெய்கொண்டு தயங்கி நடைநடந்து
தம்பூரடிக்க தனிமேளம் எக்களிக்க

தஞ்சாவூருபட்டு தனிசெவு பட்டுகொண்டு
சேலத்துப்பட்டு சேணியன் கைப்பட்டுகொண்டு
காரைகுடிபட்டு கைசெவு பட்டுகொண்டு
அறந்தாங்கிபட்டு அழகான பட்டுகொண்டு
என் அக்கஜரைமுன்னேவிட்டு அருமைதம்பிகளை பின்னே
[விட்டு

தங்காளும் ஓடிவந்து தனிவாசம் நின்றழுதாள்
தங்கமணியடிக்கும் என்னைப்பெற்ற அப்பா
நீங்கபோர தருமலோகம் ஓசையிடும்

வெள்ளி நிலைக்கண்ணாடி நான் வீமராஜா பெற்றமகள்
விதை நெல்லரிசிகொண்டு வெள்ளாவிபூவெடுத்து
வென்னீரில் தலைமுழுகி விரலாலே சிக்குணர்த்தி
வரத்தால்பிறந்தமகள் என்னைப்பெற்ற அப்பா
நான் வங்காளம்விட்டு வாகுடனே என்னைகொண்டு
வங்காளத்தம்பூரும் வகைமேளம் எக்களிக்க
வடநாட்டுப்பட்டு வாகான பட்டுகொண்டு
தென்னாட்டுப்பட்டு திறுசுக்கொரு பட்டுகொண்டு
மேனாட்டுப்பட்டு மேலான பட்டுகொண்டு
என்னைக்கொண்ட மன்னவரை முன்னேவிட்டு
என்பிறவி தம்பிகளை பின்னேவிட்டு
இன்னக்கி விரைந்துவந்து நின்றழுதால்
வெள்ளிமணியடிக்கும் நீங்கள் போகும்
வீமலோகம் ஓசையிடும்.

கருங்கல்லு சுவருவைத்து என்னைப்பெற்ற அப்பா
கல்லிழைத்த தூண்நிறுத்தி கனகமணி பந்தலிட்டு
காலாளும் சேவகரும் காவல்களும் வைத்திருந்தீர்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு காவலரும் வந்துசொல்ல

நீங்கள்பெற்ற கண்மணியும்கேட்டு கலங்கிமனமுருகி
என்னைபெற்ற அப்பா அந்த கனகமணி பந்தலிலே
என்னைக்கொண்டகட்டழகரும் நானும்களைப்பாரவந்தாலும்
அந்த கனகமணி பந்தலிலே நாங்கள் களைப்பார நீதியில்லை
நீங்கள் பெற்றக்செல்வி எனக்கு கவலைகளும்ரொம்பவல்லோ

இணைக்கல் சுவருவைத்து என்னைபெற்ற அப்பா
இளம்பவள தூணிருத்தி இளகுமணிபந்தலிட்டு
ஏவலாளும் சேவகரும் எதிராக காவல்வைத்தீர்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு ஏவலர்கள்வந்துசொல்ல
உங்கள் இளையமகன் சேதிகேட்டு இலகிமனமுருகி
இந்திரலோகம் போலிருக்கும் அந்த இலகுமணி பந்தலிலே
என்னைகொண்ட ஈஸ்வரரும் நானும் இளைப்பார வந்தாலும்
இளைப்பார நீதியில்லை நீங்கள்பெற்ற பெண்ணுளுக்கு
இடைஞ்சல்களும் ரொம்பவல்லோ

## தாயாருக்குப் புலம்பல்

பத்துமலையொதிக்கி பழனிமலை தானொதிக்கி
பாலைக்கொடி யொதிக்கி பத்தாயிரம்பூ யொதிக்கி
என்னைப்பெற்றுவளர்த்த பார்வதியைத் தானொதிக்கி
பத்துமலையிழந்தேன் பழனிமலை தானிழந்தேன்
பாலைக்கொடி யிழந்தேன் என்னைப்பெற்ற பார்வதியைத்
[தானிழந்தேன்

இன்னைக்கு பத்தூரு பச்சைகிளி
இந்தப்பாவிவாசல் பறந்தோடி வந்தாலும்
நான்பாலு யெடுத்துவைத்து பசியாரி போங்களென்றால்
நாங்கள்பாலு குடிக்கவில்லை பசியாரி போகவில்லை

உன்னைப்பெற்ற பார்வதியாள் பட்டதொரு
பாதகங்கள் சொல்லுமென பதறி அழுகுதம்மா

எட்டுமலையொதிக்கி இடும்பன்மலை தானொதிக்கி
இளம் பவளக்கொடியொதிக்கி எண்ணாயிரம்பூ வொதிக்கி
நான்பாவி என்னைபெத்த ஈஸ்வரியைத்தா னொதிக்கி
எட்டுமலை யிழந்தேன் எதிர்த்தமலை தானிழந்தேன்
இளம் பவளக்கொடியிழந்தேன் எண்ணாயிரம்பூ விழந்தேன்
நான்பாவி என்னை யீன்றெடுத்த ஈஸ்வரியை நானிழந்தேன்
எட்டுரு பச்சைக்கிளி இதை தேடிவந்தாலும்
இளநீரு கண்திறந்து இளைப்பாரி போங்களென்றால்
நாங்கள் இளநீர் குடிக்கவில்லை இளைப்பாரி போகவில்லை
என்னைப்பெற்ற ஈஸ்வரியாள் பட்டதொரு
இடஞ்சல்தனை சொல்லுமென ஏங்கி அழுகுதம்மா

தலையை வலிக்குதென்று என்னை ஈன்றதாயே
நீபெற்ற தங்காளுக்கு சட்டனவே ஆளுவந்தால்
தலைவலிக்கேற்றதொரு தனித்தைலம் தானிறக்கி
தங்கரயிலேறி தரனியிலும் பாசாகி
பச்சை ரயிலேறி பவுன்ரயிலும் பாசாகி
உன்னுட வாசலில் தனித்தைலம் கொண்டுவந்து
என்னைப்பெற்றதாயே நான் தங்காளும் வந்துநின்றால்
நான் தாயிழந்தபாவி என்று என்னைபெற்றதாயே
உன்வாசல் ஜனங்களெல்லாம் ஏசுறார்கள்

பிடரிவலிக்குதென்றால் என்னைப்பெற்ற அம்மா
நீபெற்ற பெண்ணுளுக்கு ஆளுவந்தால்
பிடரிவலிக்கேற்றதொரு பிணிதைலங்கொண்டு
பொன்னு ரயிலேரி புதாயிலும் பாசாகி

சின்ன ரயிலேரி சிகப்புரயில் பாசாகி
உன்னுடைய வாசலில் பிணித்தைலங்கொண்டு
நீபெற்ற பெண்ணுளும் பின்பக்கம் வந்துநின்ருல்
பெற்றவளைத்தோற்ற பெரும்பாவியென்று
உன்னுடையவாசலிலே பேசி என்னை ஏசுருர்கள்.

## புருஷனுக்குப் புலம்பல்

கும்பகோணம் பொன்சருவம் உன்னைத்தேடியசாமி
நான் குயிலால் இடுப்பில்வைத்து குளத்திலே தண்ணீர்மொள்ள
குளத்தோரம் போனாலும் குளக்கிலே உள்ளஜனம்
நாண்கொண்ட வரிழந்தவள் கோமானைத் தோற்றவள்
என்னைத் தேடியசாமி நான் குயிலாள் புலம்புறது
நீங்கபோன கொள்ளிமலை கேட்கிலேயோ.

அரக்கோணம் பொன் சருவம்
என்னைத்தேடிய சாமிநான்
அறிவை இடுப்பில் வைத்து
ஆற்றிலே தண்ணீர் மொள்ள
அவசரமாய் போனாலும்
ஆற்றிலே உள்ள ஜனம்
இன்னைக்கு அர்ச்சுனசிழுத்தவள்
என்னைக்கொண்ட அழகனைத் தோற்றவள்

புருஷனிழந்தவன் என்னைத்தேடிய
புண்ணியனைத் தோற்றவள்
அரக்கோணம் பொன்சருவம்
ஆகாது என்று சொன்னர்
என்னைத் தேடியசாமி நான்

அரிவை வருத்தாது
நீங்கள்போன அரவிமலே கேட்கலேயோ.

பொன்னிழைத்த பாய்மேலே
என்னைத்தேடிய சாமி
சம்மிறுபேரும் பொருந்தி விளையாடையிலே
பொல்லாத பாவி எமன் உங்களுக்கு
பூலோகவாழ்வு போதுமென்று சொன்னாரோ
பொன்னூரதம் தந்தாரோ அந்த
பொன்னூரத மேறி
என்னைத்தேடிய சாமி நீங்க
அந்த புவனடிக்கு போகலாமோ
இங்கே பூர்த்து மலர்ந்திருக்கும்
பூவை இழக்கலாமோ.

பவுனிழைத்த பாய்மேலே
என்னைத் தேடியசாமி நீங்கள்
படுத்துறங்கும் வேளையிலே
பழிகாரபாவி எமன் உங்களுக்கு
பட்டணத்துவாழ்வு பக்ஷமும் போதுமென்று
பவுனூரதமேறி என்னைத்தேடியசாமி
பரமலோகம் போகலாமோ இன்னக்கி
பண்புடனுடுத்திவரும் பட்டை யிழக்கலாமோ"

## பிள்ளைக்குப் புலம்பல்

செண்பகம்பாதி பூந்ரங்கம் பேர்பாதி
செண்பகம் பூர்த்து செழித்து மலர்ந்திருக்கும்
என்னைப்பெற்ற தாயே அந்த செண்பகபூ வெடுத்து

ஸ்ரீரங்கநாதருக்கு திரிகால பூசைசெய்ய
என்னைப்பெற்ற தாயே நான் பாவியுட
வாசல் ஒரு சேயனில்லா சஞ்சலந்தான்.

மல்லிகைபாதி மாயூரம் பேர்பாதி
மல்லிகைப்பூத்து மலர்ந்து செழித்திருக்கும்
என்னைப்பெற்ற தாயே அந்த
மலலிகைப்பூ வெடுத்து மாகதேவநாதருக்கு
தாயேநான் பாவி வாசல் ஒரு மதலையில்லா சஞ்சலந்தான்.
கொழுந்து ஒருபாதி கும்பகோணம் பேர்பாதி

கொழுந்து செவிர்த்து குளிர்ந்து மலர்ந்திருக்கும்
அந்த குளிந்த கொழுந்தெடுத்து
கும்பேஸ்வர நாதருக்கு
குருபூசை செய்வதற்கு
என்னைப்பெற்ற தாயே
உன்னுடைய வாசலிலே ஒரு
குழந்தையில்லா சஞ்சலந்தான்

முற்றிற்று.

---

V. Press, Madras.

**பழைய கொக்கோகம்** விலை ரூ. 2

64—அழகிய ஆப்டோன் படங்கள் சேர்த்து
உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது.

அதிவீரராம பாண்டியனுல் இயற்றப்பட்ட பழைய கொக்கோகத்தின் உண்மையான அச்சுப் பிரதி இதுவே. காலதேச வர்த்தமானங்களுக்கேற்பஇன்றைய மேதாவிகளான காமகலா சாஸ்திரக்ஞர்களின் அபிப்பிராயங்களும் கலந்து பழமையோடு புதுமையும் கூடி பொன் மலர் வாசனை கொண்டதுபோல் உங்களைக் குதூகலிக்கச் செய்யும். பல அழகிய இயற்கை உருவமைந்த ஆப்டோன் படங்களுடனும் கூடியது. அழகிய பைண்டு; சிறந்த அச்சு; நல்ல வசனம் எல்லாம் கூடி ஒருங்கு அமைந்த பழைய கொக்கோகம் இதுவே.



**முத்துமாமா** அணு. 4

என்ற விகட விநோதக்கதையை நீங்கள் படித்துப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் உடனே வாங்கிப் படியுங்கள். இதைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும் கூட சிரிப்பீர்கள். இதைப்போன்ற கதை தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை. இப்புத்தகம் வேண்டுவோர் 5-அணு ஸ்டாம்பு அனுப்பினுல் புக்போஸ்டி லனுப்பப்படும்.

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,
நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை

**வில்லிபாரத வசனம் அல்லது**
**மகா பாரத வசன சங்கிரகம்** — விலை ரூ. 3

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

பாரதம் ஆதிமுதல் அந்தம் வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமல் படிக்கத்தெள்ளிய தமிழ் வசன நடையில் தமிழ்ப் பண்டிதரும், 'கம்ப நாடர்' ஆசிரியருமான மோ. வே. கோவிந்தராஜ அய்யங்காரவர்களால் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு நூதன முறையில் வெகு அழகான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது. வாசகசாலைக்கும், பரிசளிப்பதற்கும் இன்றியமையாதது.

**பிரபஞ்ச விநோதக் கதைகள்** — விலை ரூ. 1

படிக்கப் படிக்க இனிமை அளிப்பது. இப்பிரபஞ்சத்தில் நடக்கும் அதி விநோதமான செய்கைகள் பலவும் விளக்கப்பட்டிருப்பது. அதி உன்னதப்போக்கு. அழகிய கதைகள்.

இதில் அடங்கியுள்ள கதைகளாவன:—

2. பந்தயத்தால் மனைவியை இழந்தது 2. பெண்ணால் மோசம்போன சாஸ்திரி 3. முகஸ்துதியால் ஏமாந்த கோடீசுவரன் 4. ஐந்து சகோதரிகளின் தந்திரம் 5. மூன்று காதலர் கர்தலிகளின் பரிதாபம் 6. வஞ்சகன் வலையில் மடமான் 7. ஒரு காதல் கலியாணத்தின் நேர்மை 8. காதல் வேட்டை 9. செல்வியின் தந்திரம் 10. காமுகனுக்குப் படிப்பினை.

தமிழ் புத்தகங்கள் முற்றுமடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,
நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி., சென்னை.